## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| | | |
|---|---|---|
| **M.C.O.P. No. 41/2022** | **Date :** 01.09.2023 | **PW1** |
| Name: பழனிசாமி | த/பெ.மாரியப்பன் | |
| Evidence Recorded Time: 11.21 A.M. to 11.40 A.M. | | |

**2-ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

விபத்து 09.12.2021 அன்று நடைபெற்றது என்றால் சரிதான். நான் TN 30 B 5532 ஹீரோ ஹோண்டா ஸ்பிளண்டர் இருசக்கர வாகனத்தில் செல்லும்போதுதான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். விபத்திற்கு பின்னிட்டு நான்கு நாட்கள் கழித்து 12.12.2021 அன்றுதான் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். காவல் நிலையத்தில் யார் புகார் கொடுத்தார்கள் என்றால் என்னுடைய மகள் கொடுத்தார். இந்த விபத்திற்கு என்னுடைய கவனகுறைவும், ஆஜராக்கரதையும் காரணம் என்றாலும், அதனால்தான் காவல் நிலையத்தில் தாமதமாக புகார் கொடுக்கப்பட்டது என்றாலும் சரியல்ல. TN 30 B 5532 என்னுடைய வாகனம் என்றால் சரிதான். மேற்படி வாகனத்தினை விபத்திற்கு பிறகு மேட்டூர் மோட்டார் வாகன ஆய்வாளரிடம் காண்பிக்கப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில் காட்டப்படுள்ள வாகனம் என்னுடையதுதான் என்றாலும் அதில் சொல்லியுள்ள விவரங்கள் என்னுடையதுதான் என்றாலும் சரிதான். <u>மேற்படி மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை எ.ம.சா.ஆ.1 ஆகும்.</u> மேற்படி மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில் வாகனத்தை ஓட்டியவருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றும், வாகனத்திற்கு இன்சூரன்ஸ் இல்லை என்றும் சார்ஜ் ரசீது வழங்கப்பட்டுள்ளது என்றாலும் சரிதான். விபத்து சமயத்தில் நான் ஓட்டி சென்ற வாகனத்திற்கு இன்சூரன்ஸ் செய்யப்படவில்லை என்பதாலும், எனக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதாலும் 2-ம் எதிர்மனுதாரர் எந்த நஷ்டஈடும் கொடுக்கவேண்டியது இல்லை என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் மீது எந்த ஆஜாக்கரதையும் இல்லை என்றால் சரியல்ல. விபத்திற்கு பின்னிட்டு மேட்டூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். மேட்டூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கு விபத்து பதிவேடு, காயச்

சான்றிதழ், டிஸ்சார்ஜ் சம்மரி ஆகியவை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி கங்கா மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கு பாலிசி காப்பு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த இன்சூரன்ஸ் மூலம் ரூ.71,590/- பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் சரிபார்க்கப்பட்ட மருத்துவ பில்கள் ரூ.4,51,901/- என்றால் சரிதான். மேற்படி சரிபார்க்கப்பட்டதற்கான ஆவணம் எ.ம.சா.ஆ.2 ஆகும். என்னுடைய வயது, தொழில், வருமானம் குறித்து ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணிபுரிந்து வருகிறேன் என்றும் மாதம் ரூ.1,06,000/- வருமானம் பெறுவதற்கான ஆவணங்களை மேற்படி துறையினரை விசாரித்து தாக்கல் செய்தால்தான் ஏற்றுக்கொள்ள முடியும் என்றால் சரியல்ல. விபத்து நடந்ததற்கு பின்னிட்டு எத்தனை நாட்கள் விடுப்பில் இருந்தேன் என்பதற்கும், அதனால் எனக்கு எவ்வளவு வருமான இழப்பு ஏற்பட்டது என்பதை காட்டுவதற்கும் ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்திற்கு பின்னிட்டும் மின்சார வாரியத்தில் நான் செய்து வந்த பணியினை தான் இன்றும் செய்தும் அதே சம்பளத்தை பெற்று வருகிறேன் என்றால் சரிதான். நஷ்டஈடு அதிகமாக பெறவேண்டும் என்ற எண்ணத்தில் எனக்கு ஏற்பட்ட பாதிப்புகளை மிகைப்படுத்தி கூறுகிறேன் என்றால் சரியல்ல. விபத்தினால் ஏற்பட்ட காயங்கள் அனைத்தும் குணமாகிவிட்டது என்றாலும், விபத்தில் ஏற்பட்ட காயங்களால் எனக்கு எந்த விதமான உடல் ஊனமும், வருமான இழப்பும் இல்லை என்றால் சரியல்ல. 29.12.2021-ம் தேதிக்கு பிறகு இரண்டு வருடங்கள் தொடர் சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள நஷ்டஈடு அதிகம் என்றாலும், 2 ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை.**

ஒம்/-PW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/-S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.